// பாதுகாப்பான முறையில் //

**ஈரோடு மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், ஈரோடு–1.**

நி.மு.எண். 7778 / ஆ1/ 2023 நாள். 26 .11.2024

பொருள் : பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஈரோடு மாவட்டம் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.225, தொழிலாளர் துறை, நாள்.15.02.1972
2. அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.03.08.1977.
3. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்.12.03.2007
4. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ 1) துறை நாள்.02.03.2016.
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ 1) துறை, நாள்.23.01.2020.
6. ஈரோடு முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.7530/அ1/2022, நாள்.12.10.2022.
7. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ 1) துறை, நாள்.08.03.2023
8. ஈரோடு முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.3339/ஆ1/2023, நாள்.14.07.2023
9. அரசு கடித எண். 1308/ப.க4(1)/2023–1, பள்ளிக்கல்வித் துறை நாள். 06.11.2023
10. அரசு கடிதம் (efile) எண்.4419/தொ.க. 1(1) /2024–1 நாள்.17.05.2024.
11. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்ந.க.எண்.026062/ஜே/இ2/2023 நாள்.22.05.2024.
12. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.79032/ஜே/இ2/2023 நாள்.22.08.2024.

கரூர் மாவட்டம், குருணிகுளத்துப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் முதுகலை ஆசிரியராகப் பணிபுரிந்த திரு.எஸ்.காசிவிஸ்வநாதன் என்பவர் 31.10.2014ஆம் நாளன்று பணியிலிருக்கும் போதே மரணமுற்றதால், அன்னாரது வாரிசுதாரரான மனைவி திருமதி.ஆர்.செந்தூர்யா என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கக் கோரி விண்ணப்பித்ததின் அடிப்படையில், பணியிலிருக்கும் போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்படி, பார்வை – 5 இல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளும் நிறைவு செய்துள்ளதின் அடிப்படையில் பார்வை– 6 இல் காணும் செயல்முறைகளின்படி, மரணமுற்ற அரசு ஊழியரின் வாரிசுதாரரான திருமதி.ஆர்.செந்தூர்யா என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ், பள்ளிக்கல்வித் துறையில் ஈரோடு மாவட்டம், பவானிசாகர், அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக தற்காலிக அடிப்படையில் பணி நியமன ஆணை

வழங்கப்பட்டு, அன்னார் மேற்படி பள்ளியில் 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

பார்வை – 7 இல் காணும் அரசாணை பார்வை – 10 இல் காணும் அரசு கடிதம் மற்றும் பார்வை – 11 இல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின்படி, அன்னார் தற்போது பணியாற்றி வரும் விவரங்களின் அடிப்படையில் கீழ்காணும் பட்டியலில் கண்டுள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காண் நிபந்தனைகளுக்குட்பட்டு அன்னாரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் /பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திருமதி.ஆர்.செந்தூர்யா<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மேல்நிலைப் பள்ளி.<br>பவானிசாகர்,<br>ஈரோடு மாவட்டம். | 14.10.2022<br>முற்பகல் | 14.10.2022<br>முற்பகல் |

மேற்காண் பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திடல் வேண்டும். தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும், மேற்காண் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பின்னரே தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்படும். மேலும், அன்னாருக்கு தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதித்திடல் வேண்டும்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை அன்னாரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
ஈரோடு.

பெறுதல் : சார்ந்த பணியாளர்.(உரிய வழியாக)

நகல் : அலுவலக கோப்பிற்கு / உபரி–1.